VLAMBARAM™ இலவசம்

# விளம்பரம்™

FREE ☎: 416 282-8059

மாதமிருமுறை வெளிவரும் சமூக முன்னேற்றப் பத்திரிகை



வீடு விற்பது, வாங்குவது வாழ்வில் முக்கியமான
செயல்களில் ஒன்று. எனவே இவை பற்றி
பூரணமான இலவச ஆலோசனைகளைப் பெற
☎: (416) 491- 4002 / 287 - 2183
ராஜா எம். மகேந்திரன்
sales rep.
*நம்பிக்கை * நேர்மை * திறமை*



நதி VIII | FEBRUARY 01, 1998 | பாலம் 03



- வீடு வாங்கும் போது ஏற்படும் ஆரம்பச் செலவு (பக்கம் 8)
- யோகாசனத்தின் பயன்கள் (பக்கம் 4)
- இறந்த மனிதன், உயிர்பெற்று இயங்குவானா? (பக்கம் 2)
- பச்சையான உணவில் உள்ள நன்மைகள் (பக்கம் 5)
- "பாலும் பழமும்" படத்தில் டாக்கர் ரவி.... சிவாஜி (பக்கம் 6)
- ஆரம்ப விஞ்ஞானியும் ஆதிகால புராணங்களும் (பக்கம் 5)
- ஒற்றுமை பலமா! (பக்கம் 6 )


## விடியாத இரவு

கண்ணில் கண்ணீர் சுமக்கும் கன்னி பூ இவள்
கருவறை இருட்டென கண் கலங்கியவள்
சில நாட்கள் கருவறையில் இருப்பதற்கு
சிணுங்கியவள் சிட்டுக்குருவியென
வெளிவந்தவள் சில காலங்கள் சிறகு
விரித்திட்டவள் சில நிமிடங்கள் சிந்தனையில்
சிரித்திட்டவள் சீதனம் அவள் கால்களை
கட்டு போட வேதனையானவள் மணவறையில்
அலங்காரமாக காளையவன் கட்டும் தாலி
பெண்ணவள் கழுத்துக்கு வெறும் கயிறாக
கன்னியவள் கலங்க ஆணானவன் கடமைக்கு
கணவனாக கன்னியவள் கனவுகள் விடியாத
இரவானது!

கலாராணி இராசரெத்தினம்


**ELECTRICAL REPAIRS**

உங்களிடமுள்ள சகல
விதமான ரெலிவிசன்கள்
றேடியோக்கள் வீடியோக்களை
குறைந்த செலவிலும், சிறந்த
முறையிலும் குறிப்பிட்ட
நேரத்திலும் திருத்திக்
கொள்ளநாடுங்கள்
முருகதாஸ்-☎ 261-6883

**MOVING DELIVERY**

* FOR SMALL OR BIG MOVING
* REASONABLE RATES
* RELIABLE SERVICES

☎: (416) 286-7562
CELLULAR PHONE: 562-7977

**TUITION**

9ம் வகுப்பிலிருந்து 13ம் வகுப்பு வரையான
மாணவர்களிற்கு விஞ்ஞானம், கணிதம்
போன்ற பாடங்கள் வீட்டில் வந்து
கற்பிப்பதற்கு அனுபவமிக்கவரான
Baskarஐ நாட வேண்டியவர் பாஸ்கர்
(416) 269-9683

**SINGAPORE PAGING**



Motorola Brovo $39.00
MotorolaPronto $65.00
சேவை மாதம் மட்டுமே
$5.95

* 12 மாதங்களுக்கு முன் பணம் செலுத்த வேண்டும்
* Pagerஐ கொள்முதல் செய்ய வேண்டும்
* 3மாத குத்தகையும் உண்டு
* ஸ்காபரோவில் கிளைகளும் உண்டு

விபரங்களுக்கு : Raj
☎: (416) 745-2378

**சகல ரக வீடியோக்களும் திருத்துமிடம்**

TV, VIDEO, MICROWAVE OVEN,
REMOTE CONTROL, AMPLIFIER
நியாயமான விலையில், தரமாகத்
திருத்திக் கொடுக்கப்படும்.
(23 வருட அனுபவம்.)
கிருபானந்தராஜா (LONDON QUALIFIED)
TEL: 438-9134



**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**

Introducing 1Hour Photo Lab:
3X5 & 8X12
Professional Photographer
தொடர்பு - கதிர்
☎: (416) 750-8118
2425 EGLINTON AV. E. UNIT 3
KENNEDY/ EGLINTON
SCARBOROUGH

**Tea Time**

24 Hours Coffee, Tea,
Donuts & Our Foods
Kipling / Steeles சந்திப்பில் தமிழர் நிர்வாகத்தில்
மேல்நாட்டு உணவு வகைகளுடன் எம்நாட்டு உணவு
வகைகளும் 24 மணிநேரமு் பரிமாறப்படுகின்றது.
Special - Tea Time
String Hoppers -100
$8.49 (சொதி, சம்பலுடன்)
☎: (416) 745-0514
5010 Steeles Ave. W. Unit #4

**TUITION**

அனுபவம் வாய்ந்த தரமான
முதுகலை (M.A.) பட்டதாரி
ஆசிரியையினால் KINDERGAR-
DEN இலிருந்து Grade 6
வரையிலான பிள்ளைகளுக்கு
Tution சொல்லிக் கொடுக்கப்படும்
PL. CALL: 755-8034

**PRIVATE TUITION**

PRIVATE TUITION
(UPTO OAC)
MATH, CALCULUS
& CHEMISTRY
BY AN EXPERIENCED TEACHER
☎: (416) 447-6860

**PRIVATE TUITION**

ENGLISH / MATH
BY AN EXPERIENCED TEACHER
GRADE 3 TO GRADE 10
☎: (416) 447-6700

**துரித பணமாற்றுச் சேவை**

வவுனியா - கொழும்புச்
சுற்றுப் புறங்களுக்கும் -
சிங்கப்பூர் - சென்னை
ஆகிய இடங்களுக்கு
கடுகதியில் பணம்
அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
☎ (416) 267-8221

**RAAJ WATCH WORK**

சகல விதமான மணிக்கூடுகளும்
(Watch & Clock) குறைந்த
கட்டணத்தில், உத்தரவாதத்துடன்
குறித்த தவணையில் திருத்திக்
கொள்வதற்கு நகரில் நாட
வேண்டிய ஸ்தாவனம்.
NATHAN
☎: (416) 265-5580
2885 LAWRENCE AVE. EAST
BRIMLY/ LAWRENCE
(Close to Biway)



**சிவாகம கிரியா பீடம்**

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் ஐயர்)
திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr., Scarborough, Ont.



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
SCARBOROUGH, ONT. M1B 5P9, CANADA
TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978

# அறிவும் ஆக்கமும் (3) - விஜே குலத்துங்கம்



மனித இனத்தின் வயது எல்லை கடவுளால் அல்லது இயற்கையால் நிர்ணயிக்கப்பட்டது, அதை மாற்ற இயலாது என்ற எண்ணம் பல்லாண்டு காலமாக நிலவி வருகின்றது. ஆனால் விஞ்ஞான வளர்ச்சியும், முன்னேற்றமும் இவ் வெண்ணத்தை மாற்ற உள்ளது.

இறப்பைத் தடுப்பதற்காக, பாற்கடலில் உள்ள அமிர்தத்தை அருந்துவதற்காக தேவர்களும், அசுரர்களும் போட்டி போட்ட புராணக்கதைகள் தொடங்கி இன்றுவரை, வயது எல்லையை நீடிப்பதற்கு பல்வேறு முயற்சிகள், விஞ்ஞான ஆராய்ச்சிகள் போன்றவை பல்வேறு வழிகளில் எடுக்கப்பட்டு வருகின்றது.

தற்போது கையாளப்பட்டு வரும் ஒரு முறையானது, பழுதடைந்த உறுப்புகளை நல்ல உறுப்புகளால் பிரதியீடு செய்யும் முறையாகும். ஒரு மோட்டார் வண்டியின் காலம் செல்லச் செல்ல, அதன் பாகங்கள் பழுதடைய, நாம் ஒவ்வொன்றாக புதிய உதிரிப்பாகங்களாக பிரதியீடு செய்து அதன் பாவனைக் காலத்தைக் கூட்டுகின்றோம். இதேபோல் பழுதடையும் மனித உறுப்புக்களும் மாற்றீடு செய்யப்பட முடியும். மற்றைய எல்லா விலங்குகளையும் விட, பன்றியின் உறுப்புக்கள் மனிதரின் உறுப்புகளுக்கு மாற்றீடு செய்ய, கூட பொருந்துவதாக உள்ளது. அதைவிட பன்றிகள் அதிகளவில் இறைச்சிக்காக உற்பத்தி செய்யப்படுகின்றது. அவற்றைப் பெருக்குவது இலகுவானது. ஆனால் மற்றைய விலங்குகளின் உறுப்புகளை மனிதனின் உடலில் இணைக்கும்போது, மனித உடல் அதனை எதிர்க்கின்து. இதற்காக தொடர்ந்து மருந்து வகைகளை உட்கொள்ள வேண்டியிருக்கும். மருந்து எடுத்தாலும் சில உறுப்புகள் மனித உடலால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஆனால் தற்போதைய ஆராய்ச்சிகளின் பிரதிபலனாக மனித உடலுக்கு ஒத்து வரக்கூடிய பன்றியின் உறுப்புக்களை உருவாக்கக்கூடியதாக உள்ளது. கருக்கட்டிய பன்றியின் முட்டையினுள் ஒரு மனித (Gene) பரம்பரையலகை உட்புகுத்துவதன் மூலம், மனித உடலால் ஏற்றுக் கொள்ளக்கூடிய உறுப்புகளை பன்றிகள் உருவாக்க முடியும் என ஆராய்ச்சிகள் மூலம் கண்டறிந்து கொண்டுள்ளார்கள். இன்னும் இரண்டு வருடங்களில் இப்படியாக பன்றிகளின் உறுப்புகளினால் மனித உறுப்புகள் மாற்றீடு செய்யப்படுவது நடைமுறைக்கு வரும். இதைவிட வேறு ஒரு முறையும் வயது எல்லையைக் கூட்ட உபயோகிக்கப்படலாம் எனக் கருதப்படுகின்றது. இந்த முறையில் ஒருவர் உட்கொள்ளும் உணவின் அளவை அல்லது (Calorie) கலோரிகளின் அளவைக் குறைப்பதன் மூலம் இளமையாக இருக்கலாம். அத்துடன் வாழ்நாளைக் கூட்டலாம் எனக் கருதப்படுகின்றது. சுண்டெலிகளில் செய்த ஒரு பரிசோதனையில் சில எலிகளுக்கு போதியளவு உணவைக் கட்டுப்பாடின்றிக் கொடுத்தும், வேறு சில எலிகளுக்கு 40% கலோரியின் அளவு குறைக்கப்பட்டது. உணவு குறைக்கப்பட்ட எலிகள் மற்றயவை விட 1/3 பங்கு நிறையுள்ளனவாகவும் 55 மாதங்கள் உயிர்வாழக் கூடியதாகவும் இருந்தன. அதிகளவு உணவு உட்கொண்ட எலிகள் உடல் பருத்தனவாகவும் 40 மாதங்களே உயிர்வாழக் கூடியதாகவும் இருந்தன. இதனால்தான் என்னவோ "உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு", "பசித்துப் புசி" என்ற பழமொழிகள் நம்மிடையே காணப்பட்டன. ஆனால் நாம் அவற்றைக் கடைப்பிடிப்பதில்லை.

வாழக்கூடிய கால எல்லையைக் கூட்டினாலும், மனித உடல் வயது செல்ல வயோதிபத் தோற்றத்தை அடையக்கூடும். இவை எமது உடலிலுள்ள கலங்கள் பழுதடைவ-தால் ஏற்படுகின்றது. இளம் வயதினருடைய கலங்கள் தொடர்ந்து பிரிவடைந்து புதிய கலங்களை உருவாக்குவதன் மூலம், இளமைத் தோற்றத்தை கொடுக்கும். ஆனால் வயது செல்லச் செல்ல இந்தக் கலங்களில் பிரிவடைந்து புதிய கலங்களைத் தோற்றுவிக்கும் வல்லமை குறைந்து சென்று, ஈற்றில் நின்றுவிடுகின்றது.

இந்த கலப்பிரிவுத் தொழிற்பாட்டிக்கு டெலொமரேசு (Telomerasu) என்ற நொதியம்தான் காரணமாகவுள்ளது. இதைக் குறிப்பிட்ட (Gene)பரம்பரையலகு ஒன்று கட்டப்படுத்துகின்றது. எனவே இந்த Geneஐ முதிர்வடையும் கலங்களுக்கு செலுத்துவதன் மூலம் கலங்கள் மீண்டும் பிரிவடைந்து, புதிய கலங்களை உருவாக்கக் கூடிய வல்லமை இருப்பதாக ஆராய்ச்சிகளின் மூலம் காணப்பட்டுள்ளது. எனவே இந்த Geneஐ செலுத்துவதன் மூலம் என்றும் இளமையாக இருக்கக் கூடியதான வல்லமையை பெறலாம். எனவே மாத்திரைகளை உட்கொள்வதன் மூலம் இந்த வல்லமையை பெறும் காலம் வெகு தூரத்தில் இல்லையெனக் கூறலாம்.

தற்பொழுது அமெரிக்காவில் உள்ள சில செல்வந்தர்கள், தற்போது இல்லாவிடினும் இன்னும் 50 - 60 காலத்தில், உடலைப் புதுப்பித்து இளமையாக வரலாம் என்ற எண்ணத்தில், இறந்த தங்கள் உடலை உறைய வைத்து, 50 - 60 காலம் அதைப் பாதுகாதது, பின்னர் ஏற்ற சூழ்நிலை வரும் போது தங்கள் உடல் மீண்டும் உயிர் கொடுக்கப்படலாம் என எண்ணுகிறார்கள். இதனால் அமெரிக்காவிலுள்ள ஒரு தனியார் நிறுவனம் 40,000 அமெரிக்க டொலர்களுக்கு இப்படியாக இறந்த உடலை பேணும் சேவையை செய்து வருகின்றது. ஏற்கனவே 40 உடல்கள் இப்படியாக பேணப்பட்டு வருகின்றன.

எனவே இனி எவரையாவது "நினைத்தேன் வந்தாய் நூறு வயது" . நூறு வருஷம் சீரும் சிறப்பும் பெற்று வாழ்க" என வாழ்த்தினால் அது குறைவாக மதிப்பதாக எண்ணப்படும். எனவே இதை மாற்றி 200 வருஷம் எனக் கூறவும். 2050 ஆண்டளவில் சராசரி மனிதனின் வயது 140 ஆக இருக்கும் எனக் கருதப்படுகின்றது.


புதிய நிர்வாகத்தின் கீழ்

Markham / Sheppard பகுதியில்

NEW SPICELAND

☎ : 292-0086


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 81

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | ■ | | 3 |
| | ■ | | ■ | 4 | | 5 | |
| | ■ | ■ | | ■ | ■ | ■ | |
| 6 | | 7 | 8 | 9 | | | ■ |
| | ■ | | ■ | | ■ | | ■ |
| | | 10 | ■ | | ■ | 11 | |
| ■ | ■ | | ■ | | ■ | | ■ |
| 12 | | ■ | ■ | | | 13 | 14 |

### இடமிருந்து - வலம்

1. நெற்றிக்கண்ணை காட்டினாலும் குற்றம் குற்றமே என்றவர்
3. யானை (வல - இட)
4. விபீடணணின் தங்கை
6. இந்திய சுதந்திர போராட்டத்தின் போது எல்லோர் வாயிலும் ஒலித்தது.
10. இசை (வல - இட)
11. திக்கு (வழி)
12. சிங்கம்
14. இருக்கை (வல - இட)

### மேலிருந்து கீழ்

1. பூங்காவனம்
2. பாம்பின் பகைவன்
3. இறுதி
4. உண் (கீழ் - மேல்)
5. ஒத்துக்கொள்ளல் (கீழ் - மேல்)
7. இதற்கு மூன்று கண் உண்டு
8. இதை பூவாலும் செய்யலாம் பொன்னினாலும் செய்யலாம் (கீழ்- மேல்)
9. உபாயம்
13. மடம் (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "ஸ்பைஸ் லாண்ட்" இல் பாவிக்கக்கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் February 25, 98க்கு முன்னர் கிடைக்க வேண்டும். Address: P.O.Box 37527, 31 Tapscott Rd., Scarborough, Ont. M1B 5P9

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| து | ர் | வா | ச | ர் | ■ | ணை | வீ |
| ப் | ■ | டி | ■ | வ | ■ | ■ | ர |
| ப | டை | க் | க | ல | ம் | ■ | ப் |
| ர | ■ | கை | ■ | பு | ■ | ■ | ப |
| வு | ■ | ■ | ■ | ■ | ரு | ப | ன் |
| ■ | ■ | ப | ■ | ம் | ■ | ன் | ■ |
| ளை | ■ | ட் | ■ | ட | ■ | னா | க |
| மு | ட் | டு | க் | க | ட் | டை | ■ |

### #80இல் வெற்றி பெற்றோர்

1) MRS. P. PUVANESPARAN, NORTHYORK
2) MRS. S. NAGALINGAM, DONMILLS


நியூ ஸ்பைஸ்லாண்ட்
5800 Sheppard Ave. E.
Unit#16 Scarborough, Ont.


## அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

(7 ம் பக்கத் தொடர்ச்சி)

நம்ம வள்ளுவர் அழகாகக் குறள் மூலம் சொல்லியிருக்கிறார். ஆனால் அதற்கு உயிர் கொடுத்து வடிவம் கொடுத்து மனைவியை நேசிப்பது என்பது இப்படித்தான்

என்று அல்வா மாதிரி தூக்கிக் கொடுத்தாரே நம்ம சிவாஜி அது தான்யா நடிப்பு!

அவர் நடித்தது நடிப்புத்தான். இது தான் மனைவிபாசம் இல்லற உறவு என்ற வரைவிலக்கணத்தை திரை மூலம் பல இலட்சம் நெஞ்சங்களில் பதிய வைத்தவரு. அந்தப் பாசத்தை இதயத்திலே பதிய வைத்துக் கொண்டு நல்லறம் காண்பவர் தான் அன்பர் மணி நாதன்! வாழ்க அவர்கள் தாம்பத்ய உறவு.

நான் வாழப்போகிறேன்" என்று கூறிக்கொண்டு கலைப் பயணத்தைக் தொடங்கியவரின் பாத்திரப் படைப்பின் மூலம் பல நூறு நெஞ்சங்கள், நாங்களும் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு அவர் தாங்கி நடித்த பாத்திரங்கள் தான் காரணமாயிற்று என்பதை அறியும் போது தமிழர் நெஞ்சமெல்லாம் பூரிப்படைகிறது.

அவரை இத்தகைய உயர்வுக்குக் கொண்டு வந்த நாடக திரையுலக ஆசான்கள் யார்!

இந்த நூற்றாண்டிலும் அடுத்து வரும் நூற்றாண்டுகளிலும் நடிப்புலகுக் குருவாக வணங்கப்படும் போற்றப்படும் சிவாஜியின் குரு யார்? சுவடுகள் தொடரும்


கலைமகள் புத்தக நிலையம்




*சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
*தமிழ்ப் புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
*இலங்கை/இந்திய பத்திரிகைகள்
*குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
*CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

595 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 944-1818


3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH,ONT.
☎: (416) 292-9319

துரித பணமாற்றுச் சேவை

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494

# APPLEMORE AUTOMOTIVE

**DETAILING**
Motor shampoo
Interior shampoo
Exterior wash & waxing






**Repairs**
safety certification
overall maintenance
under coating &
Rust proofing

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

☎ [416] 285-4998

முகவரி: **2500 LAWRENCE AVE. EAST, UNIT #11**
**SCARBOROUGH, ONT.** ( MIDLAND & LAWRENCE )



## TECHNOS AUTOMOTIVE INC.
## AUTO REPAIR CENTRE

- Vehicle Certification
- Mechanical & Electrical repairs for all domest and import vehicles.
- Computer diagnosis on fuel injection and electronicignition system.
- Specializing in Volvo &Hyundai
- Tire repairs & Wheel balancing
- Free Inspection and proper advise

* வாகன சேட்டிபிக்கேஷன்
* வாகனங்களுக்கான சகல விதமான இயந்திர,மின்சார திருத்த வேலைகள்
* கொம்பியூட்டர் வசதியுடன் திருத்தவேலைகள்
* ரயர் திருத்த வேலைகள்
* வீல் பலன்சிங்
* இலவச பரிசோதனையுடன் முறையான ஆலோசனைகள் வழங்கப்படும்

1253 KENNEDY RD.
ELLESMERE / LAWRENCE
SCARBOROUGH

☎ : (416) 285-8066

உங்கள் வாகனங்களின் சகல விதமான திருத்தவேலைகளும் குறைந்த செலவில் சிறந்த தரத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

Oil & Filter Change With CASTROL OIL GTX 5L (Upto 5Lt.)

"YOUR SATISFACTION IS OUR BUSINESS"


<u>திருக்குறளும் விளக்கமும்</u>

279. கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலர் கொளல்.

நேராகத் தோன்றும் அம்பு, கொலைச் செயல் புரியும் வளைந்து தோன்றும் யாழ், இசை இன்பம் பயக்கும். அது போலவே மக்களின் பண்புகளையும் அவர்களது செயலால் மட்டுமே உணர்ந்து கொள்ள வேண்டும்.

280. மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின்.

உலகத்தாரின் பழிப்புக்கு உள்ளாகும் செயல்களைத் துறக்காமல் ஒரு துறவி, தனது தலையை மொட்டையடித்துக் கொண்டோ, சடாமுடி வளர்த்துக் கொண்டோ கோலத்தை மட்டும் மாற்றிக் கொள்வது ஒரு ஏமாற்று வித்தையே ஆகும்.


*We are entering 7th year service in Scarborough.*



## Better Work ... Less Money

## N.T.E Auto Inc.
New Trade Engineering

We service
EUROPEAN , JAPANESE & DOMESTIC cars.
we are not just a Dealership.


**" FULLY LICENSED CLASS 'A' MECHANICS ON DUTY "**

We will reduce the worry and expense of maintaining your car by offering:
- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs*
- Mechanical Safety Inspection & Certification
- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- Specializing in BMW
- Parts - repairs rather than replace when possible
- Free Estimates

என். ரி. ஈ. ஒட்டோ இங்.

AUTO INC.
New Trade Engineering

151 NANTUCKET BLVD, UNIT: 12
SCARBOROUGH, ONT.
☎ (416) 750 - 1573
SIVABALAN






## Pillayar Traders

**SRILANKAN . EAST & WEST INDIAN**
GROCERIES & TEXTTILES
3630 LAWRENCE AV. E., SCARBORO
☎ : 438-7746


## விஷேச போட்டி இல. 70

1. நீள அளவைக் குறிக்கும் பிரித்தானிய அலகில் 4ஐ தருக
2. நீள அளவைக்குறிக்கும் சர்வதேச அலகில் 4ஐ தருக

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| யா | செ | அ | ம் | ல | கு | ங் | அ |
| ர் | ன் | க | நி | மி | ட | ம் | டி |
| அ | ரி | ல | மீ | ற் | ற | ர் | ப |
| ப | மீ | ம் | க | ன | ம் | தொ | ன் |
| ர் | ற் | கி | லோ | மீ | ற் | ற | ர் |
| லா | ற | ப | ர | ப் | பு | நா | ள் |
| ங் | ர் | ற | ற் | மீ | லி | ல் | மி |
| கு | அ | டி | ச | து | ர | ல் | மை |

மேற்காட்டப்பட்ட சதுரப்பெட்டிகளில் பல சொற்கள் தலை கீழாக, சீராக, இடம் வலமாக, குறுக்குப்பாடாக (diagonal). நாலு மூலை வழியாகவும் அமைந்துள்ளது. இவற்றை இனம்கண்டு பினவருவனவற்றிற்குரிய விடைகளை February 11, 98 ற்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

**# 69ன் விடைகள்**

1 - கடதாசி, 2 -பருத்தி, 4-பூக்கள், 5-மரம், 7-செப்பு, 8-வெண்கலம், 10-அலுமீனியம், 11-இரும்பு, 12-பட்டு, 13-லேஸ், 25-வெள்ளி, 30-முத்து, 35-பவளம், 40-சிவப்புக்கல், 50-பொன், 55 -பச்சைக்கல், 60--வைரம்

பரிசு பெற்றோர்:
1) Mrs. Srivathy Sivayogan, NorthYork
2) Mrs. P. Subramaniam, NorhtYork

**பரிசுகள்:** பிள்ளையார் ரேடர்ஸ் இல் பாவிக்கக் கூடிய இரண்டு($15, $10) பெறுமதியான vouchers (இவற்றிற்கு cash value கிடையாது)

**விதிகள்:**ஒருவர் எத்தனை முறையும் முயற்சிக்கலாம்.பிள்ளையார் ரேடர்ஸ்,விளம்பரம் ஊழியர்கள் பங்குபற்ற முடியாது. விளம்பரம் குழுவின் முடிவே இறுதியானது.



# ஆரோக்கிய வாழ்வு (3) - N. செல்வசோதி



## *சிரசாசனம்* (HEADSTAND)

இதனை ஆசனங்களின் அரசன் என்று சொல்லுவார்கள்- தலையைத் தரையில் ஊன்றியபடி காலை மேல் நோக்கி நிறுத்தி வைத்திருப்பதால் சிரசாசனம் எனப்படும்.

செய்முறை  தலையைத் தரையில் ஊன்றியபடி இரு கைகளையும் மடித்து மெதுவாகக் கால்கள் இரண்டையும் தூக்கி உயர்த்துவதற்குச் சில நாட்கள் முயலவேண்டும் அப்படித் தூக்கி மேல் நோக்கி நிறுத்தி வைத்திருக்கும் ஆற்றலைப் பெறும் போது பூரண ஆசன நிலை அடைகிறது. ஆரம்பத்தில் சுவரின் ஓரத்தில் நின்று பயிற்சி செய்வதுதான் பாதுகாப்பானது.

எச்சரிக்கை  ஆசன நிலையில் உடலின் எடையை முன் கைகள் இரண்டும் தாங்கியவாறு இருக்க வேண்டும். தலையில் பாரம் பொறுக்கலாகாது.

பலன்கள்

1. கழுத்திற்கு மேலுள்ள பகுதியில் இரத்த ஓட்டம் சீராக்கப்பட்டு மூளை முதலிய அனைத்து உறுப்புக்களும் புத்துணர்ச்சி பெற்று முகத்தின் பொலிவை மேம்படச் செய்கிறது.
2. ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்வதுடன் கண் சம்பந்தப்பட்ட நோய்களைக் குணமாக்குகிறது.
3. மலச் சிக்கலைப் போக்குவதுடன் உடலின் எடையை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க உதவுகிறது.
4 பற்களுக்கு உறுதியையும், மூச்சு அடைத்தல் கோளாறு என்பனவற்றிலிருந்து விடுதலையையும் தருகிறது.
5. தலைமுடி உதிர்வதைத் தடுப்பதுடன் வயோதிபத்திலும் இளமைத்துடிப்புடன் இருக்க உதவுகிறது.

காலம்  200 வினாடிகளுக்காவது இந்த ஆசன நிலையில் நின்றால்தான் பூரண பலனை அடைய முடியும்.  *(தொடரும்)*

## பல்லாண்டு வாழ 15 கட்டளைகள்

1. கனிகளை உண்டால் பிணிகள் நீங்கும்
2. ஒரு வேளைக்கு ஒரு வகை உணவையே தனி உணவாக உட்கொள்வோமேயானல் பிணி நீங்குவதுடன் தூய சிந்தனை, ஆற்றல் வளரும்.
3. சூரியனால் சமைத்த உணவு காய்கறி கீரை பழங்கள்
4. வேகாத பண்டம் வேண்டிய சத்து நிறைந்த உணவு
5. பச்சைக் காய்கறிகளைத் தின்றால் மலச்சிக்கல் ஒழியும்.
6. மாவுப் பண்டங்கள் மலச்சிக்கலுக்கு வழி வகுக்கும்.
7. பசுமையான பச்சை உணவு உடலைப் பாதுகாக்கும் உணவு
8. காலையில் திரவ உணவு ஆரோக்கியத்திற்கு நல்ல வழியாக அமையும்
9. கவலையும் சோம்பலும் முன்னேத்திற்குத் தடை
10. ஆரோக்கியத்திற்கே உணவு- நாவுக்கு ருசிக்கு அல்ல
11. உடல் உழைப்பு இல்லாவிட்டால் தூக்கம் வராது. தூக்கமின்மை பல நோயை கொண்டு வரும்.
12. அளவுக்கு அதிகமான அதிக சத்து உணவுகள் குடலில் அல்சருக்கு வழி கோலும்.
13. தன் கையே தனக்கு உதவி என்பது உழைத்து முன்னேற மட்டும் அல்ல, ஆரோக்கியத்துக்கும்தான்.
14. காலையில் கனமான உணவு கவலையின் தொடக்கமாகும்.
15. இரவில் அகால போசனம் நோய்களுக்கு வித்தாகிவிடும்.

*-நன்றி யோகக்கலை*


Neelam SILK

வட அமெரிக்காவில் உயர்ந்தரகப் பட்டுப் புடவைத்

தெரிவிற்கு ஓர் சிறந்த புடவை மாளிகை

**நீலம் சில்க்**

அனைத்து மக்களின் அன்பான நல்லாதரவுடன் 6வது ஆண்டில் வெற்றிப் பாதம்பதிக்கும்

நீலம் சில்க்கின் 1998ம் ஆண்டிற்கான

புதிய வருகைகள்

- கிரிஜாவின் சௌந்தர்யா ரை அன் டை (Tie & Die) சாறி
- கிரிஜாவின் சிம்போனி கிறேப் சில்க் சாறிகள்
- கிரிஜாவின் பிரதீபா 2 கலர் தாவணி ரிசு சேலைகள்
- கிரிஜாவின் சுவாயம்வர் ரிசு (Custom Made Special Jari)
- மினி அபூர்வா சேலைகள்

கோலம், ரங்கோலி, அபூர்வா, காஞ்சியின் புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள் "நீலம் சில்க்"

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

1453 GERRARD STREET EAST
(Indian Bazzar)





7 DAYS Open நகரின் மத்தியில்

GREAT ONE TEXT

1368 QUEEN ST. WEST (QUEEN & BROCK)
TEL: (416) 588-7989

- சிறுவர்களுக்கான உடைகள்
- ஆண்கள், பெண்களுக்கான உடைகள்

* எக்ஸ்பிரஸ் பணமாற்று சேவை

- USA, LONDON, SINGAPORE பிடவைகள்
- 3வது வருடத்தில் கால்பதிக்கும் GREAT ONE TEXT

EVERY WEEK ARIVAL





YARLCAN

STEAM CLEANING







Tel: (416) 724-9085 / Pager : 600 0335 / Cell: 315 0332


தீவினையின் மூலவேர் ஒரு செடி வளர்வதற்கு என்ன என்ன தேவையோ, அது போல ஒரு மனிதன் பண்பாடு பெறுவதற்குக் கல்வி அவசியம். மற்றெல்லாப் படிப்புகளையும் விட, மனிதன் எப்படி இருக்க வேண்டும் அவன் எப்படி வாழவேண்டும் என்பன மிகச் சிறந்தவை; உயர் நோக்கமுள்ளவை. கற்காமல் இருப்பதைவிட, பிறக்காமல் இருப்பதே நல்லது. ஏனெனில் அறியாமைதான் தீவினையின் மூலவேர்.

-பிளேட்டோ

## நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம் (3)

-M. உமா

**ஆரோக்கிய வாழ்வும் உணவு முறைகளும்**

சென்ற இதழில் உணவிலுள்ள அடிப்படைச் சத்துக்கள் பற்றிய விளக்கங்களை கொடுத்திருந்தோம். இவ்விதழில் எமது அன்றாட உணவு வகைகளில் காணப்படும் நன்மை, தீமைகளைப் பார்ப்போம்.

**காய்கறி, பழவகைகள் (Vegetables & Fruits)**

தொடர்ந்து வரும் ஆராய்ச்சிகள், காய்கறி பழவகையில் காணப்படும் நன்மையான இயல்பிற்கு சான்று அளிக்கின்றது. ஒரு மனிதன் தனது உணவில் அதிகமான காய்கறி பழவகைகளை சேர்ப்பதால், அவன் ஆரோக்கியமான நீண்ட கால வாழ்விற்கு வித்திடலாம். காய்கறி பழவகை நிறைந்த உணவு வகையானது பெரும்பான்மையான புற்று நோய்களை (Lung, Colon & Breast Cancer) குறைக்க வல்லது. அத்துடன் பல ஆராய்ச்சிகளின்படி இவ் உணவுகள் இதய வியாதிகள் (Coronary heart disease) உருவாகும் சந்தர்ப்பத்தை குறைப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பொதுவாக காய்கறி பழவகைகளில் உயிர்ச்சத்துக்கள் (Vitamins), Phytochemicals எனப்படும் ஒரு வகை மருந்துப் பதார்த்தங்கள், நார்ப்பதார்த்தங்கள் (fibres) நிறைந்து காணப்படுகிறது.

- உயிர்ச்சத்துக்களின் முக்கியத்துவம் பற்றிய விளக்கங்களை ஏற்கனவே அறிந்திருப்பீர்கள்.

- Phytochemical எனப்படும் மருந்துப்பதார்த்தம் பல வகைப்படும். இவை கரும்பச்சை, மஞ்சள் நிறமுடைய காய்கறி பழவகைகளில் அதிகளவு காணப்படுகிறது. உதரணமாக Carrot, Broccoli, Orange, Apple, Tomatoes, peppers என்பனவற்றில் இப்பதார்த்தம் அதிகமாக காணப்படுகிறது. இவ்வகை மருந்துப் பதார்த்தம் அதிகமாக காணப்படுகிறது. இவ்வகை மருந்துப் பதார்த்தங்களே இதய நோய்களையும் புற்று நோய்களையும் குறைப்பதற்கு முக்கிய ப்ங்கை வகிக்கிறது.

- நார்ப்பதார்த்தங்கள் காய்கறி பழவகைகளில் நிறைந்து காணப்படுகிறது. இவை மலச்சிக்கல், குடல் வியாதிகளையும் குறைக்கவல்லது. அத்துடன் பெருங்குடல் புற்று நோய், இதய நோய் உருவாகும் சந்தர்ப்பத்தை குறைக்கின்றது.

**அறிவுரைகள்**

- நாள் ஒன்றிற்கு 400 கிராம் நிறையளவு மரக்கறி பழவகைகளையாவது உங்களது உணவில் சேருங்கள்.
- அப்பிள் (Apple) தோடம்பழத்தை விட நல்லமா? கரட் தக்காளியை விட நல்லமா?

அப்படி இல்லை. ஒரு உணவில் அதிகமாக காணப்படும் பதார்த்தம் மற்றைய உணவில் குறைவாக காணப்படலாம். எனவே பலவகையான மரக்கறி பழவகைகளை சேர்க்கும் போது நிறைகுறைகளை சமநிலைப்படுத்தலாம்.

-எப்போதும் காய்கறி பழவகைகளை தெரிவு செய்யும் போது கரும்பச்சை, மஞ்சள், செம்மஞ்சள் நிறங்களை தெரிவு செய்யவும். இவற்றில் Phytochemical எனப்படும் பதார்த்தமும், மற்றைய சத்துக்களும் நிறைவாக காணப்படுகிறது.

-இயலுமானவரை மரக்கறிகளை பச்சையாகவோ அல்லது அரை அவியல் (*half boil ) ஆக உண்பது சிறந்தது. ஏனெனில் நாம் சமைக்கும் போது பலவகை சத்துக்கள் அழிக்கப்படுகின்றது.

( தொடரும்.... )

## ஆதிகால விஞ்ஞானிகள்

*ஆக்கம் -V. Thuruvasankari*



1. வானம் கறுத்துகிடக்கு கரும்முகில் கூட்டங்கள் அசைந்து உலகத்தையே பற்றிக் கொள்ள துடித்துக் கொண்டிருந்தன. தன் வெற்றியை பறை சாற்ற என்னவோ இடை இடையே பட்டாசுச் சத்தங்கள் வானத்தை கிழித்ததுபோல மின்னல் வீச்சுக்கள் அங்கும் இங்கும் கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் தோன்றி மறைந்தன. மழைவிட்டு இன்னும் அரைமணி நேரம் கூட ஆகவில்லை மேலும் அடைமழைக்கு ஆயத்தங்கள் நடந்தன. கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிட விருப்பமில்லைப் போலும் அக்காவின் மூத்தமகன் நிர்வாணமாக நின்று கொண்டு மழைத்தூறலில் தாவரத்தின் வெளியே எப்போதோ கிடைத்த இருபத்தைந்து சதக்குற்றியை மேலும் கீழும் எறிந்து விளையாடிக் கொண்டிருந்தான். நிமிடத்திற்கு நிமிடம் அவனுடைய வேகம் அதிகரித்தது. பாவம் அவன் கையில் இருந்த இருபத்தைந்து சதக்குற்றி வளவின் மூலையில் வெள்ளம் தேங்கிக் கிடந்த பள்ளத்தில் விழுந்து- மறைந்தது. இடிப்பு பெரிதும் அவனை வாட்டியது போலும் அங்கும் இங்கும் அலைந்தான் என்ன செய்வது என தெரியாது திகைத்து நின்றான் சிறிதுநேரம் பரபரப்பாக எதையோ தேடின. அவனுடைய கண்கள் ஒரு மூலையில் குவித்துக் கிடந்த விறகு குவியலை நோக்கி விரைந்து சென்று தனக்கு பொருத்தமான ஒரு சிறுசுள்ளி தடியை எடுத்துக்கொண்டு விரைந்து திரும்பினான் தான் காசைப் பறிகொடுத்த இடத்துக்கு.

2. யன்னல் அருகே இருந்து கொண்டு மங்கல் ஒளியில் விஷ்ணு புராணத்தை, புரட்டிக் கொண்டு இருந்தது என்னுடைய கைகள் என் பார்வை மருமகனின் நடத்தையை அவதானித்ததே ஒழிய விஷ்ணு புராணத்தில் நாடவில்லை. சுள்ளித்தடியோடு திரும்பிய அவன் பள்ளத்தில் தேங்கி இருந்த நீரை சுள்ளித்தடியால் ஒரு சிறு வாய்க்கால் போன்ற அமைப்பை அமைத்து அதை பள்ளமான இடத்தை நோக்கி இழுத்திச் சென்றான். அவன் பின்னாலே பள்ளத்தில் தேங்கிய நீர் மந்திரத்தால் கட்டுண்டதுபோல அவனை பின்தொடர்ந்து நீர்முற்றாக வடிந்து பள்ளத்தின் அடிதெட்டத்தெளிவாக தெரிந்தது. அதன் அடியின் ஒரு மூலையில் அவனுடைய இருபத்தைந்து சத நாணயக்குற்றி பல்லை இழித்துத் தன்னை அறிமுகம் காட்டிக்கொண்டிருந்தது.

சிறுவன் ஆனந்தக்கூத்தாடினான் அது பொறுக்காமல் என்னவோ எங்கிருந்தோ வந்த தாய் அவனை நையப்புடைத்தாள். சனியன் உனக்கு வருத்தம் வந்தால் என்னடா செய்ய அவள் குரலில் வறுமையின் கொடுமை தொனித்தது.

3.என் கண்கள் மீண்டும் வீஷ்னு புராணத்துக்குள் புதைந்து கொண்டது. கிராண்ராட்ஷதனின் (Hiranyaksha) தவத்தைப் போற்றி அவனுக்கு (Invulnerability) வரம் கொடுத்தான். இவ் வரத்தை பாவித்து கிராண்ராட்ஷதன் தேவர்களையும், கடவுள்களையும் தண்டிக்கத் தொடங்கினான். வேதங்களைத் திருடினான். பூமியை இருண்ட நீருக்கு அடியில் இழுத்துச் சென்று ஒழித்து வைத்தான். கிராண்ராட்ஷதனுக்கு அழிக்கப்பட்ட வரத்தின் படி பன்றியைத் தவிர மற்றைய எல்லா உயிர்களையும் தாக்கி அழிக்க அவன் வல்லமை பெற்று இருந்தான். பன்றியை அவன் மறந்து இருந்தான். இதனைப் பாவித்து விஷ்ணு அவனைத் தண்டிக்க வராக அவதாரம் (Varaha) எடுத்தார். தன்னுடைய பற்களினால் நாற்பது மைல்கள் அகலமானதும் நாலாயிரம் மைல்கள் நீளமான வாய்க்காலை வெட்டி வேதங்களை மீளப்பெற்றதுடன் பூமியை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வந்தார். (தொடர்ச்சி 12ம் பக்கம்)


**TAMIL INSURANCE CLAIMS CONSULTANT**

**"தமிழில் இலவச ஆலோசனை"**

வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்

ரவி நடராஜா

❊ தகுந்த ஆலோசனை
❊ சட்ட உரிமைகள்
❊ விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடு
❊ உரிய நஷ்டஈடு ❊ மற்றைய இழப்பீடு
❊ மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும்,

அறிவுரைகளுமதமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்தமுறையில் பெற்றுக்கொள்ள தொடர்புகொள்ளுங்கள்: **TEL: (416) 231-5134**

**FAX: (416) 231-7433**



**நான் ஒரு வழக்கறிஞர் இல்லை.**




**குடிவரவு சட்டம் IMMIGRATION LAW**

- அகதி நிலை விண்ணப்பம்
- மேன்முறையீடு
- ஸ்பொன்சர்

**குற்றவியல் சட்டம் CRIMINAL LAW**

**விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ACCIDENT VICTIMS**

ஆகியவற்றில் அனுபவமுள்ள வழக்கறிஞர்களுடன் மொழிபெயர்ப்பாளராகவும், உதவியாளராகவும் தொழில்புரிகின்றேன்.
உங்களுக்குத் தேவையான சட்டசம்பந்தமான உதவிகளுக்கு



தொடர்பு கொள்ளுங்கள்....> **எஸ்.கே. தீசன் (416) 631-6322**



**நியூ ராஜன் சலூன்**

உங்களது அழகு கூந்தலை மேலும் அழகுபடுத்த நகரில் புதியதோர் நிறுவனம்



* பெரியவர்களுக்கு $9.00
* சிறுவர்களுக்கு $7.00
* வயது வந்தவர்களுக்கு விஷேட கழிவு

**Tuesday to Sunday 10:30Am - 7:30Pm**
**Pl. Call: Raja Tel: (416) 741-9198**
**Pager (416) 739-2393**

5010 Steeles Ave. W., Unit 19, (Kipling / Steeles)



**IMMIGRATION CONSULTANT**

*Christina Staden, M.A.*

Member of the Association of Immigration Counsel of Canada

18 years experience

**Free assessment, LOW COST, money back guarantee***

Tel. Toronto (416) 222-5254 Mississauga (905) 501-0307

9AM.-9P.M.

## ஒற்றுமை

-மணி-

வானம் கறுத்து மின்னல் இடிமுழக்கங்களுடன் மழை பெய்யத் தொடங்கியது. இந்தப் பெருமழையினால் காட்டாறுகள் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியது. அக் காட்டாறுகளின் ஓரத்தில் இருந்த ஒரு மரத்தின் இலைகளில் சில மழைத்துளிகள் தங்கியிருந்தன.


அந்த மழைத் துளிகளில் ஒன்று மற்றத் துளிகளைப் பார்த்து "நாம் தனித்தனியாக வந்தோம் எல்லோரும் ஆற்றோடு கலந்து விட்டனர், நாம் மட்டும் இங்கேயே நின்றுவிட்டோம், நாமும் ஏன் அதிலே போய்க் கலக்கக்கூடாது?, நாமும் போய் விடுவோம்" என்றது.

ஐயோ! இந்த ஆற்றிலே கலந்து கல்லுகளிலும், மலைகளிலும், மரங்களிலும் அப்படி இப்படி அடிபட்டு ஓட எங்களுக்கு விருப்பமில்லை, நாம் இங்கேயே இப்படியே இருக்கப் போகிறோம் என்றன மற்றைய மழைத்துளிகள்.
கேட்ட மழைத்துளிக்கோ மிகவும் கவலையாக இருந்தது. எனக்கு எவரிடத்திலும் தங்கியிருப்பது விருப்பமில்லை. நான் எனது இனத்துடனேயே போகப் போகின்றேன் எனக்கூறி, அந்நேரம் வீசிய தென்றற் காற்றில் இலை அசைந்த போது அதிலிருந்து வீழ்ந்து ஆற்றிலே கலந்து ஓடியது.

ஆற்றிலே கலக்க விருப்பமில்லை எனக் கூறிய மழைத்துளிகள் அந்தக் காற்றின் அசைவிலும் இலையை விட்டு விலகாமல அதிலேயே தங்கியிருந்தன.
கருமேகக் கூட்டங்கள் கலைந்து சூரியன் தோன்றத் தொடங்கியது. அந்தச் சூரிய வெப்பத்தில் இலையில் இருந்த மழைத் துளிகள் ஆவியாகத் தொடங்கின.
அப்பொழுதுதான் அம் மழைத்துழிகள் தாம் தங்கள் பலம் இழந்து அழியப் போவதை நினைத்தது. நாமும் ஆற்றிலேயே கலப்போம் எனக்கூறி அதிலே வீழ்வதற்கு தயார் செய்தன. ஆனால் வெப்பம் அதிகமாக இருந்தமையால் அவை கீழே வீழ்ந்து கலப்பதற்குரிய பலத்தை இழந்திருந்தன.
அப்படியே அவை நினைத்துத் தம் பலத்தை இழந்து கொண்டிருக்கையில்....இவற்றின் சம்பாசனையையும, நடந்து முடிந்த நிகழ்சிகளையும் கேட்டும் பார்த்தும் கொண்டிருந்த மரம் பேசத் தொடங்கியது. நீங்கள் எல்லோரும் முதலிலேயே ஒற்றுமையாகப் போயிருந்தால் அந்த ஆற்றிலே கலந்து ஓடி சமுத்திரத்திலேயோ, குளத்திலேயோ சங்கமித்து நிம்மதியாக இருந்திருக்கலாம். ஒற்றுமையில்லாமல் தனியாக இருந்ததனால் நீங்கள் இப்போ உங்கள் இனத்துடன் சேர முடியாமல் பலம் இழந்து அழிந்து கொண்டிருக்கிறீர்கள் "ஆற்றைப் பாருங்கள் எவ்வளவு வேகமாகப் பாய்கிறது, பாறைகளை எல்லாம் தகர்த்துக் கொண்டு ஓடுகின்றது" நீங்களோ உங்கள் பலத்தை இழந்து..... என்று பேசிக் கொண்டிருக்கும் போது இலைகளிலே அந்த மழைத் துளிகள் இருந்த இடமே தெரியாமல் அழிந்து காணப்பட்டது.



22 Melham Road, Unit #1 Scarborough, Ont. Tel: (416) 299-4202



# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

-வீணை மைந்தன்

## நான் வாழப் போகிறேன் (சுவடு 3)



"அம்மா நான் வாழப்போகிறேன்", என்றான் பெற்ற தாய் நான் அதற்குத் தடையாக இருக்க முடியுமா! எந்தத் தாய் தான் தன் பிள்ளை "வாழப்போகிறேன் அன்னை ஆசீர்வதித்து வழியனுப்பு" என்று கேட்கும் போது வாழாயிருக்க முடியும். நிறைஞ்ச மனசுடன் அவனை அவன் விரும்பிய நாடக உலகிற்கு வழியனுப்பி வைத்தேன்." என்று அன்னை இராஜாமணி அம்மையார் உயிருடன் வாழ்ந்த காலத்தில் கூறியதை இங்கு குறிப்பிட்டுள்ளேன்.

அவனது நாடக திரையுலக வாழ்க்கைப் பாதையிலே கொஞ்ச தூரம் பின்னோக்கி நடந்து பார்த்தால் அவன் கடந்து வந்துள்ள காட்டாறுகள் எவ்வளவு என்று கணக்குப் பார்க்க முடியும். பாட்டொலிக்கும் குயில்கள் இல்லை அவன் பாதையில்! படமெடுத்தாடும் பாம்புகள் நெளிந்திருக்கின்றன! தென்றலைத் தீண்டியதில்லை அவன்! ஆனால் தீயைக் தாண்டியிருக்கிறான்" கேளுங்கள் அவன் கதையை என்று பின்னால் வரும் போது அவனது வாழ்க்கை அநுபவங்களை ஆங்காங்கு தேவை கருதிக் குறிப்பிடுவேன்.

எந்த இலட்சியத்தை மனதில் நிறுத்திக் கொண்டு நம்பிக்கை விடா முயற்சி உழைப்பு திறமை பொறுமை ஆகியவற்றை மூலதனமாக்கிக் கடுமையாக உழைத்து உயர்ந்த மனிதனாகப் பரிணமித்துக் கொண்டிருந்தவனது பாத்திரப் படைப்புகள் பலரது ஆத்மாவைக் சுண்டியிழுத்திருக்கின்றன, சுத்தமாக்கி வைத்திருக்கின்றன!

நிஜவாழ்வில் நான் சந்தித்த ஒரு அன்பரின் தாம்பத்திய வாழ்வு மிக மிக மகிழ்ச்சியாக இருப்பதற்கு பாலும் பழத்தில் டாக்டர் ரவியாக வேடமேற்று நடித்த அவரே காரணம் என்று நன்றி ததும்பக் கூறினார். தொண்ணூற்று ஆறு பெப்ரவரியில் சென்னை அண்ணா கலையரங்கில் அருமைச் சகோதரர் பி.எச். அப்துல் ஹமீத் அவர்களினால் லலிதா நகை மாளிகையாரின் ஆதரவில் சன் டி.வியில் ஒளிபரப்பாகும் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சி தொடர்ந்து ஐந்து நாட்கள் நடைபெற்றன. இவ் வேடிக்கை விநோத நிகழ்ச்சியின் மூலம் குரல் வளம் மிக்க பலரும் பாடும் ஆர்வத்தைத் திறமையை வெளிக் கொணரக் கூடியதாக விருந்தது. இந் நிகழ்ச்சிக்கு திரு. ஹமீத் அவர்கள் தினமும் என்னையும் கூடவே அழைத்துச் செல்வார். அன்று அண்ணா கலையரங்கில் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியில் பங்கு கொள்ள வந்தவர்களில் அறிமுகமான அன்பர் தான் சேலத்தைச் சேர்ந்த திரு. மணி நாதன் என்பவர். இவர் ஒரு ஆசிரியர் பிரபல பத்திரிகை ஆசிரியர் திரு. கார்மேகம் அவர்களின் (வீரகேசரி - தினமணியில் பணிபுரிந்தவர்) மகன் திரு. முரளிதரன் அவர்களினால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். நட்பு நிறைந்த இந்தச் சந்திப்பிற்கும் உரையாடலுக்கும் கருவாகவும் களமாகவும் அன்று விளங்கியது எங்கள் கலைப்புருஷரின் நடிப்பாற்றலே!

"அண்ணே நான் நடிகர் திலகத்தின் பயங்கர ரசிகன் இதோ நிற்கிறாளே என் மனைவி இவளுடன் நான் மகிழ்சியுடன் குடும்பம் நடத்துவதற்கு அவர்தான் அண்ணே காரணம்!" நான் ஆச்சரியம் மேலிடும் மகிழ்ச்சியுடன் அவரையும் அவர் மனைவியையும் பார்க்கிறேன். பாசம் - பரிவு - காதல் தான் அண்ணே எனக்கு வரப்போகும் மனைவியுடன் எப்படி இல்லறம் நடத்த வேண்டும் என்கிற முதல் பாடம்.



| | | | |
|---|---|---|---|
| கிரகப் பொருத்தம் பார்த்தல் | 3 | 4 | சாதகக் குறிப்பு கணித்தல் |
| ல | யோ கா சோ தி ட ம் | (416) 299-8361 | 6 |
| 12 | | | எண்சோதிடப்படி ஆலோசனை கூறுதல் |
| சுபமுகூர்த்தம் கணித்தல் | 10 | 9 | பலன் பார்த்தல் |





*" எனக்கு மீனைக் கொடுக்காதே; மீனைப் பிடிப்பது எப்படி என்று கற்றுக்கொடு" -சீனப்பழமொழி


குடும்ப பல்வைத்தியர்
**Family Dentist**
**Dr. Mahin Pouyan**



உங்கள் முழுக் குடும்பத்திற்கும் பல் சம்பந்தமான சிகிச்சைகளிற்கு 18 வருட காலம் அனுபவமும், City of NorthYork Public Schools Board of Education ஆல் தெரிவு செய்யப்பட்ட பல் வைத்தியர் **Dr. Mahin Pouyan** ஐ நாடுங்கள்

☎: (416) **225-5522** * ஞாயிற்றுக் கிழமைகளிலும்

263 Finch Ave. E. (Finch & Bayview), North York, Ont. M2N 4S1

**பூச்சி / எலிகளை அழிக்க வேண்டுமா!!**

உங்கள் வீடுகளில் காணப்படும் பூச்சிகள், எலிகளை அழிக்க வேண்டுமா? உடன் தொடர்பு கொள்ளுங்கள்

(416) 750-1012 / (905) 839-2966 Car Phone: (416) 617-8717

**YASO DESIGNS**

*Architectural & Engineering Services (15 Year Prof. Experience)*

*வீட்டின் பகுதியில். வியாபார ஸ்தாபனங்கள், ரெஸ்ரோறன்ற் போன்றவற்றை அமைப்பதற்கும், ஏதாவது மாற்றங்கள் செய்வதற்கும், படங்கள் வரைந்து அரசாங்க அனுமதி பெற்றுத் தருவதிலும், கட்டிடங்கள் திட்டமிடலும் இவைபோன்ற மற்ற சேவைகளிற்கும் தொடர்புகொள்ளுங்கள்*



யசோ - Tel: (416) **283-3841** Pager: **758-8671**


**LOW COST CARPET**
**& Interior's Warehouse**

